இணைப்பு I.

[454 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 609-க்கான விடையைக் காண்க.

விவர அறிக்கை.

(அ) இயற்கை காடுகளை வெட்டி அப்புறப்படுத்த தடை இருப்பதால் விறகுக் காடுகளை வெட்டி அப்புறப்படுத்த அரசின் முன் அங்கீகாரம் பெறப்படுகிறது. அரசின் அங்கீகாரம் பெற்ற பிறகே விறகு கூப்புகளை விற்கும் விற்பனை அறிவிப்புகள் செய்யப்படுகின்றன. இந்த விற்பனை அறிவிப்புகள் அந்தந்த வனக் கோட்டத்தில் பதிவு பெற்ற குத்தகைதாரர்களுக்கு அனுப்புவது தவிர மாவட்ட அரசிதழ்களிலும் தினசரிப் பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்தப்படுகின்றன. ஏலத்தில் அதிகமானவர்கள் கலந்து கொள்ளவும் அதிகமாக போட்டியிடவும் அதனால் அரசுக்கு அதிக வருவாய் வரவும் ரூ. 10,000-க்கு மேல் மதிப்புள்ள வனப் பொருட்கள் ஏலமிடப்பட்டால் தினசரிப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட வேண்டுமென அரசு அண்மையில் உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த உத்திரவின் கீழ் விற்பனையை குத்தகைதாரர்க்கு உறுதிப்படுத்தும் அதிகாரம் அரசிற்கு உள்ளது.

இயற்கை காடுகளில் உள்ள விறகுக் கூப்புகள் தவிர ஊராட்சியின் நிலங்களில் எழுப்பப்பட்டுள்ள வனப் பண்ணைத் தோட்டங்களும் மக்களின் விறகுத் தேவையைப் பூர்த்தி செய்ய ஏலத்தில் விற்கப்படுகின்றன. இப்பண்ணைக் காடுகள் இயற்கைக் காடுகளுக்கு வெளியே உள்ளதால் அரசின் தடை உத்தரவு மேற்படி தோட்டங்கள் விற்பனைக்கு பொருந்தாது.

இத்தோட்டங்கள் மக்களின் விறகுத் தேவையை பூர்த்தி செய்யவும், மரம் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளின் தேவையை பூர்த்தி செய்யவும் வளர்க்கப்படுகின்றன. இவைகளை விற்பதற்கு அரசின் அங்கீகாரமோ, விற்பனையை உறுதிப்படுத்த அரசின் அனுமதியோ தேவையில்லை. இத்தோட்டங்களின் விற்பனையை குத்தகைதாரர்களுக்கு அறிவிப்புதோடு தினசரிப் பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்யப்படுகின்றன.

ஒதுக்குக் காடுகளில் உள்ள விறகுக் கூப்புகளுக்கு காலமுறை பின்பற்றப்படவில்லை. ஆனால் வனப் பண்ணைத் தோட்டங்கள் பொதுவாக 10 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் வெட்டப்படுகின்றன. நியாய விலை மற்றும் விளைச்சல் வனத்துறையினால் நிர்ணயிக்கப்படுகின்றன. ஒவ்வொரு கூப்பில் எவ்வளவு விறகு

கிடைக்கக்கூடும் என்பதையும் விறகுகளை வெட்டுவதற்கான, கூலியளவு மற்றும் அவைகளை அப்புறப்படுத்துவதற்கான போக்கு வரத்துக் கட்டணம் மற்றும் ஏனைய செலவுகளையெல்லாம் கருத்தில் கொண்டுதான் இந்த நியாய விலையை வனத்துறை நிர்ணயிக்கிறது.

விறகுக் கூப்புகள் கீழ்க்கண்டவாறு ஏலத்தில் கொண்டுவரப் படுகின்றன.—

முதல் விற்பனை :

விளம்பரத் தேதியிலிருந்து விற்பனைத் தேதிவரை ஒரு மாத காலம்.

மறு விற்பனை :

முதல் விற்பனையில் ஏலம் கேட்கப்படவில்லையானால் 15 நாட்களில் மறு விற்பனை நடத்தப்படும்.

டெண்டர் :

மறு விற்பனையில் ஏலம் கேட்கப்படவில்லையானால் 15 நாட்களில் டெண்டர் கோரப்படும்.

ஏல விற்பனையில் கலந்துகொள்ள அந்த வனக் கோட்டத்தில் அந்த வருடத்திற்கு பதிவு செய்யப்பட்டுள்ள குத்தகைதாரர்கள் மட்டுமே தகுதியுடையவர்கள். ஏல விற்பனையில் கலந்து கொள்வதற்கு முன்பு ஏலதாரர், மாவட்ட வன அலுவலரால் நிர்ணயிக்கப்பட்ட பிணை வைப்புத்தொகை (Earnest Money Deposi) செலுத்த வேண்டும். ஏல விற்பனை தொடங்க முன்பு ஏலதாரர் வருமான வணிக வரி நிலுவை இல்லாச் சான்றிதழ்கள் சொத்து மதிப்பு சான்றிதழ் ஆகியவற்றைக் கொடுக்க வேண்டும். அவ ரால் கொடுக்கப்படும் சொத்து மதிப்புச் சான்றிதழ் அல்லது பத்திரத்திற்கு அதிகமான தொகைக்கு கேட்கும் ஏலதாரர் அவ் வாறு அதிகமாக உள்ள தொகையை ரொக்கமாக வைப்புத் தொகையாகச் செலுத்தினாலன்றி ஏலமெடுக்க அனுமதிக்கப்பட மாட்டார். அதிகத் தொகைக்கு கேட்ட ஏலதாரர் ஏலம் நடத் தும் வன அலுவலரிடம் சம்பந்தப்பட்ட விற்பனையில் முடிவில் முழுத் தொகை அல்லது பாதி அல்லது மூன்றில் ஒரு பங்கு பிணை வைப்புத் தொகையைக் கழித்துச் செலுத்த வேண்டும். ஏலதாரருடைய ஏலத் தொகையை ஏற்று விற்பனைத் தேதியி லிருந்து 60 நாட்களுக்குள் ஆணை வெளியிடப்படும். ஏலதாரர் ஏலம் எடுத்ததை மறுக்க இயலாது. ஏல விற்பனை நிபந் தனைகளின்படி (Sale Notice Conditions) மாவட்ட வன அலுவலர் விற்பனையை நடத்துவர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1982 மார்ச் 23]

(ஆ) விறகுக் கூப்புகளை பொறுத்தமட்டில் வேப்ப மரம், புளிய மரம், சந்தன மரம் மற்றும் நூக்க மரம் (Rosewood) மர வகைகள் அடையாளம் இடப்பட்டு நிலைப் படுத்திய மரங்கள் (Reserved Species) தவிர புதர் காடுகளும், விறகுக் காடுகளும் வெட்டி அப்புறப்படுத்த அனுமதியளிக்கப் படுகிறது. வனப்பண்ணைத் தோட்டத்தை பொருத்த வரையில் கருவேல மரங்கள் அப்புறப்படுத்தப்படுகின்றது. வனப் பண்ணைத் தோட்டத்தில் எழுப்பப்படும் தல மரங்கள் மரம் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதால் பொதுவிற்பனைக்கு அனுமதிக்கப்படுவதில்லை. மரக்கூழ் வகை மரங்கள் பொது ஏல விற்பனையை அரசு தடை செய்துள்ளது.

தமிழ்நாடு சட்டப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATURE LIBRARY
20 DEC 1982
MADRAS 600 009